Appendix I.

[*Vide* Answer to Starred question No. 421 at page 289]

A portion of the roof of the building of the St. Antony's Elementary School, Mackay's Garden, Royapettah, collapsed at about 12-15 p.m. on 23rd November 1965, slightly injuring 5 pupils of Standard II and the class teacher. They were treated as out-patients in the Royapettah Government Hospital for minor injuries and sent home. They were met by the D.E.O. and the Joint D. S. E.

The Elementary School with standards I to V used to be conducted in that building. When the D. E. O. visited the school on 8-4-1964, he noticed the unsafe condition on the building and issued a notice to the manager that he should arrange to have the children removed to another building or have the school closed for summer vacation and that the school would be permitted to be held in that building after the summer holidays only if a certificate was produced from an Engineer of the Public Works Department that the building was safe for occupation. Accordingly, the manager shifted all the classess to No. 2-A, Nungambakkam High Road, about 3 furlongs away where the management was running another school; but, later, due to the pressure of the parents, continued classes I and II in the old premises but in a thatched shed near the building. On 23rd November, 1965 the day of the incident, since the floor of the shed got very wet owing to heavy rains, the children of Standard II were asked to go into the school building for shelter when a portion of the roof collapsed.

Standards I and II have been shifted to 2-A, Nungambakkam High Road from 24th November 1965. The Commissioner of Police has reported that a case under Section 337, I. P. C. has been registered and is under investigation.

ராயப்பேட்டை, மக்கித் தோட்டத்திலுள்ள செய்ன்ட் அந்தோணி தொடக்கப்பள்ளி கட்டிடக் கூரையின் ஒரு பகுதி, 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதியன்று பிற்பகல் 12-15 மணியளவில், இடிந்து விழுந்தது. இதனால் II-ம் வகுப்பு மாணவ, மாணவியர் ஐவருக்கும், வகுப்பு ஆசிரியைக்கும் இலேசாகக் காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ராயப்பேட்டை அரசாங்க மருத்துவ மனையில் புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களை மாவட்டக் கல்வி அதிகாரியும், உயர்நிலைக் கல்வி இணை நெறியாளரும் சந்தித்தனர்:

I முதல் V வகுப்புக்கள் வரையுள்ள தொடக்கப்பள்ளி அந்தக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வந்தது. 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ந் தேதியன்று மாவட்டக் கல்வி அதிகாரி அத்தப் பள்ளியைப் பார்வையிட்டார். அந்தக் கட்டிடத்தின் மோசமான நிலையைப் பாகத்ததும் அவர் பள்ளிச் சிறுமியர்களை வேறு கட்டிட்த்திற்கு மாற்ற வேண்டுமென்றும் அல்லது கோடை விடுமுறைக்காகப் பள்ளியை மூடவேண்டுமென்றும், கோடை விடுமுறைக்குப் பிறகு ஷ கட்டிடம் நல்ல நிலைமையிலிருக்கிறது என்று பொதுப் பணித்துறைப் பொறியாளர் ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக் சமர்ப்பித்தால்தான் அங்கு பள்ளி நடத்த அனுமதிக்கப்படும் என்றும்

5th November 1966]

பள்ளி நிர்வாகிக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பினர். இதை யொட்டி ஷெ நிர்வாகி எல்லா வகுப்புகளையும், 3 பர்லாங் தொலைவிலுள்ள நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, 2-A எண்ணிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றிவிட்டார். அங்கு இப்பள்ளி நிர்வாகத்தினர் வேறொரு பள்ளியை நடத்தி வந்தனர். ஆனால் பின்னர் பெற்றோர்களின் வற்புறுத்தல் மேல், I, II-ம் வகுப்புகளை பழைய இடத்திலேயே அக்கட்டிடத்திற்கு அருகில் கூரைக் கொட்டகை ஒன்றில் நடத்தி வந்தார்கள். இந்த விபத்து நடந்த 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதியன்று, கொட்டகையின் தரை கனத்த மழை காரண மாக மிக ஈரமடைந்திருந்தது. எனவே, II-ம் வகுப்புச் சிறுவர்களை பள்ளிக் கட்டிடத்திற்குள் போய்த் தங்கும்படிக் கேட்டுக்கொண்டனர். அப் போது கூரை இடிந்து விழுந்தது- I, II-ம் வகுப்புகளை 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ந் தேதி முதல் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள 2-A எண் கட்டிடத்திற்கு மாற்றிவிட்டார்கள். இது பற்றி இ.பி.கோ. 337-வது பிரிவின் கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை நடந்து வருகிறது எனப் போலீஸ் கமிஷனர் அறிவித்துள்ளார்.

இணைப்பு II.

[310 ம் பக்கத்திலுள்ள 438 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

(அ) & (இ) ஆம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பழையகாயல் கிராமத்தின் குக்கிராமமாகிய ஓராமச்சந்திரப்புரத்திலுள்ள ஹரிஜனங்கள் குறையிரந்து கொண்டதன் மேல் அந்த குக்கிராமத்தில் உள்ள உப்பளங்களுக்கு வழி அமைப்பதற்காக 3·03 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 1958-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ந் தேதி அன்று வசப்படுத்திக்கொள்ளப்பட்டது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங் களின் உரிமையாளர்களில் இருவர் மேற்படி நில ஆர்ஜிதச் செயல் முறைகளுக்கு எதிராக தூத்துக்குடி மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தனர். சரியான முறையில் அறிவிப்பு கொடுக்க வில்லை என்பதால் மேற்படி நீதி மன்றம் அந்தக் செயல்முறை செல்லாது எனத் தீர்ப்பளித்தது. மாநில அரசாங்கம் திருநெல்வேலி மாவட்ட நீதி பதியிடம் மேல் முறையீடு செய்தது. இந்த மேல் முறையீடு தள்ளப் பட்டது. விரிவான பரிசீலனை நடத்தியபின், ஆர்ஜித செயல்முறைகளைப் புதிதாகத் தொடங்கலாம் என அரசாங்கம் முடிவு செய்தது.

முன்பு நீதி மன்றம் பிறப்பித்த ஆணைகளின் மூலம் எந்த நிலங்கள் சம்பந்தமான செயல்முறைகள் செயலற்றுப் போயினவோ அந்த நிலங்கள் சம்பந்தமாகப் புதிதாக நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடரப்பட்டன. இதற்கிடையில், முந்திய ஆர்ஜித நடவடிக்கைகளால் இடருற்ற சில நில உரிமையாளர்கள், அரசாங்கம் செய்யக் கருதிய நில ஆர்ஜித நடவடிக் கையை எதிர்த்து அரசாங்கத்திடம் முறையீடு செய்துகொண்டனர். முன்னர் செய்த நில ஆர்ஜிதச் செயல் முறைகளுக்கு எதிராக மற்றொரு வழக்கும் தொடரப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், திருநெல்வேலி கலெக்டர் செயற்குறிப்புகள் அனைத்தையும் மீண்டும் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு அறிவித்தார். உப்பளங்களுக்கு மூன்று அணுகு பாதைகள் இருந்தன. தெற்கு அணுகுபாதை மிகுந்த செலவை ஏற்படுத்தும். இதை அரிஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மத்திய பாதைக்குரிய நில ஆர்ஜித நடவடிக்கைகள் நீதி மன்றத்தின் ஆணைகளின் மூலம் செல்லு படியற்றவையாகிவிட்டன. நில உரிமையாளர்களும் அரசாங்கத்துக்கு முறையீடு செய்துள்ளனர். வடக்கு அணுகுபாதை சாத்தியமானதாகவும் தூத்துக்குடி நகருக்கு அருகில் இருப்பதால் மிகுந்த வசதியுள்ளதாகவும் இருக்கிறது. இதைப் பயன்படுத்துவதற்கு அரிஜனங்கள் இசைவு தெரி வித்தனர். எனவே திருநெல்வேலி கலெக்டர் இந்த வடக்கு அணுகு பாதை நெடுக ஒரு வழியை அமைக்க நில ஆர்ஜித செயற்குறிப்பைப் புதிதாக அனுப்பியுள்ளார். இந்தச் செயற்குறிப்புக்கு 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ந் தேதியன்று அரசாங்கம் ஒப்புதல் தந்தது.